அ.வ.எண்: 85/2014 நாள்: 25.02.2026

பி.வா.சா.3 – ராஜு

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததா என்றால் வரவில்லை. இரண்டாம் பிரதிவாதி அழைத்ததன் பெயரில்தான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் டி .சிறுவனூர் ஆகும். வாதி தனலட்சுமி எனக்கு தெரியும் அவர் ஆலங்குடியைச் சேர்ந்தவர். 1ம் பிரதிவாதி முத்துலட்சுமியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும் வாதியும் அவரும் சகோதரிகள் ஆவர். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். நான் வெளிநாட்டில் இருந்து தற்போது தான் இந்தியாவிற்கு வந்துள்ளேன் என்றால் நான் வெளிநாட்டில் இரண்டு ஆண்டுகள் தான் இருந்தேன். 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டு தான் வெளிநாட்டில் இருந்தேன். 1ம் பிரதிவாதிக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு நேரடியாக தெரியாது ஆனால் 1971 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றதாக சொன்னார்கள். 1ம் வாதி 1ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக குத்தகைக்கு கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும்.

2. மேற்படி குத்தகை கொடுக்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் உடன் இல்லை, ஆனால் அவர்கள் எனது இடத்திற்கு அருகில் தான் இருப்பதால் விவசாய வேலை செய்யும் போது தெரியவந்தது. மேற்படி குத்தகை சாகுபடி ஒப்படைக்கும் பொழுது ஒரு ஏக்கருக்கு 4 மூடை வீதம் ஒரு ஏக்கர் 67 சென்டிற்கு 6 1/2 மூடை நெல் கொடுக்க வேண்டும் என்று ஒப்புக்கொண்டது பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியும் என்னை வைத்து தான் பேசி கொடுத்தார்கள். ஒவ்வொரு வருடமும் நெல் கொடுக்கும் பொழுதும் என்னை அழைத்து வைத்து தான் நெல் கொடுத்தார்களா என்றால் சரிதான். அவ்வாறு அவர் எத்தனை ஆண்டுகள் நெல்மூடை கொடுத்து வந்தார்கள் என்றால் எனக்கு விவரம் தெரிந்த காலம் முதல் கொடுத்து வருகிறார்கள். நான் வெளிநாட்டில் இருந்த காலங்கள் தவிர மற்ற வருடங்களில் என்னை வைத்து தான் நெல் கொடுத்தார்கள். அவர் கடைசியாக எந்த வருடம் நெல்மூடை கொடுத்தார்கள் என்றால் 2004,2005 ஆம் வருடம் கொடுத்தார்கள் தேதி மாதம் நினைவில் இல்லை.

3. தாவா வழக்கு எந்த வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே எப்பொழுது பிரச்சனை ஏற்பட்டது என்றால் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு நகை சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. மேற்படி பிரச்சனையில் இருந்து குத்தகை சாகுபடி நெல் கொடுப்பதை நிப்பாட்டி விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல 15 வருடங்களுக்கு முன்பாக

பிரச்சனை வந்திருந்தால் 2004,2005 ஆம் ஆண்டு குத்தகை நெல் கொடுத்ததாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1971 ஆம் ஆண்டு பிறந்தேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி குத்தகை 1972 ஆம் ஆண்டு பேசி ஒப்புக்கொள்ளப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், அப்பொழுது எனக்கு ஒரு வயது என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்ட நகை சம்பந்தமான பிரச்சனை குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும், நாங்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் தான் அதனால் அது பற்றி எங்களுக்கு தெரியும்.

4. மேற்படி நகை சம்பந்தமான பிரச்சனை எப்பொழுது நடைபெற்றது என்றால் தேதி மாதம் நினைவில் இல்லை, உத்தேசமாக ஒரு 12 வருடங்களுக்கு முன்பாக நடைபெற்றது. நான் மேற்படி பிரச்சனை சம்பந்தமாக கூட்டம் ஏற்பட்டதன் காரணத்தினால் தான் அங்கு சென்றேன் என்று சொன்னால் சரிதான். வாதி பிரதிவாதிக்கு குத்தகைக்கு கொடுக்கவில்லை என்றும் தாவா வழக்கு மற்றும் மேற்படி நகை சம்பந்தமான பிரச்சனை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும் பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வாதிக்கு எந்தவித குத்தகை சாகுபடி நெல்லும் கொடுக்கவில்லை என்றும் அதை பற்றி விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.02.25 17:05:13 +0530